# உதயசூரியன்

Uthayasooriyan

උදය සූරියන්

கதிர் : 04, 05 - ஜூன், ஜூலை- 2007 - விலை : 10.00


12 FEB 2008 UNIVERSITY OF JAFFNA

# ஈடிணையற்ற தலைவர்

## அமிரைப் பற்றி தலைவர் ஆனந்தசங்கரி



அன்றைய பரம விரோதியாக அரசியலில் இருந்த அமரர் ஜி.ஜி பொன்னம்பலம் அவர்கள் தானே தோல்வியுற்றிருந்த வேளையிலும் அமரர் அமிர் அவர்களின் தோல்வி தமிழினத்துக்கு ஏற்பட்ட ஒரு பெரும் இழப்பென கூறியதன் மூலம் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் மதிப்பிட முடியாத பெறுமதியை வெளிப்படுத்தினார்.

அமரர் அமிர்தலிங்கத்தின் தலைமையில் அமரர் சிவாவும் நானும் முழு நம்பிக்கை வைத்திருந்தோம். திரு சிவா அவர்கள் இறக்கும் வரை அமிர் அவர்கள் பேச்சு வந்துவிட்டால் அவரின் கண்கள் பனிபபதை நான் பலதடவை பார்த்திருக்கிறேன். "நான் இறந்து அமிர் வாழ்ந்திருக்க வேண்டும்" என்று மனம் நொந்தவர் திரு. சிவசிதம்பரம் அவர்கள்.

எமது இறுதி சந்திப்பின் போது அமிர் அவர்கள் எனக்கு கூறியது இன்றும் என். காதுக்குள் ஒலித்துக்கொண டிருக்கிறது. "சங்கரி எம்மை எது காத்திருக்கிறது என்பதை நாம் அறிவோம் இருப்பினும் எம்மில் சிலர் அதற்கு முகம் கொடுத்துதான் ஆக வேண்டும்" என்றார். அவரது இறுதி வார்த்தைகள் அவரின் தீர்க்கதரிசனமாகவே அமைந்தது.

# எம் இதயங்களில் வீற்றிருப்பவர்கள்

35 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களின் மனங்களில் ஆகர்சித்திருந்தவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அ.அமிர்தலிங்கம் அவர்கள். தந்தை செல்வாவின் வழிகாட்டுதலில் புதிய தலை முறையின் தலைவராக உயர்ந்தவர். பல்கலைகழகத்தில் அவர் கலாநிதி என்.எம். பெரேராவின் மாணவர். பாராளுமன்றத்தின் உள்ளும், வெளியிலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அண்ணல் காந்தி காட்டிய வழியில் போராடியவர்.

அவர் இனப்பிரச்சனை தொடர்பாக அதிகாரப் பகிர்ந்தளிப்பு தொடர் பாக ஆழ்ந்த புலமை வாய்ந்த உரைகளை பாராளு மன்றத்தினுள் ஆற்றியவர். ஆங்கிலத்திலும், தமிழிலும் அவரது உரைகள் புகழ் பூத்தவை. தமிழ் மக்கள் மத்தியில் அவர் புகழ்பூத்த பேச்சாளர் துணிச்சல் மிக்க போராட்டக்காரர். புலிகள் அவரை படுகொலை செய்ததன் மூலம் நிரப்ப முடியாத வெற்றிட மொன்றை ஏற்படுத்தினர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று செயற்பட வேண்டியதன் அவசியத்தை அவர் முன்னுணர்ந்திருந்தார். கருத்து ரீதியாக அதற்கு ஆதரவான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார். இந்த காலப்பகுதியிலேயே அவர் படுகொலை செய்யப்பட்டார்.

அவர் மீது தமிழ் மக்கள் எந்தளவு பற்றும் பாசமும் அளவு கடந்த மரியாதையும் கொண்டிருந்தார்கள் என்பதற்கு யாழ்ப்பாணத்தில் அவரது இறுதி சடங்குகள் நிகழ்ந்த போது யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் கூடிய பல்லாயிரக்கணக்கான மக்களே சாட்சி. புலிகளின் அச்சுறுத்தல் எல்லாவற்றையும் மீறி தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் பல்லாயிரம் மக்கள் பங்குபற்றினர்.

இந்தியாவின் புகழ்பூத்த பிரதமர்களான அன்னை இந்திரா காந்தி அவர்களும், ராஜீவகாந்தி அவர்களும் பெருமதிப்பு வைத்திருந்தனர். பல உலகத் தலைவர்கள் ராஜதந்திரிகள் மத்தியில் அவர் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

உலகளாவிய அளவில் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை எடுத்துரைப்பதிலும், நீதி நிலை நாட்டப்பட வேண்டுமென்பதிலும் அவருடைய எடுத்துரைப்பும், பங்களிப்பும் கனதியானவை. அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் எமக்கு ஒரு பேறாக கிடைத்திருக்கா விட்டால் உலக அரங்கில் ஈழத் தமிழர்களின் குரல் ஒலிப்பதை நாம் நினைத்துப் பார்த்திருக்க முடியாது.

அமிர்தலிங்கம் அவர்களின் தீர்க்க தரிசனம் இன்று நிஜமாகியிருக்கிறது. அந்த பெருந்தலைரின் வெற்றிடம் இன்று பாரியளவில் உணரப்படுகிறது.

# சமஷ்டி அல்லது இந்திய முறையிலான ஒரு தீர்வை முன்வைப்பதே அரசுக்குள்ள ஒரே வழி

**தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி அவர்களின் கடிதத்திலிருந்து.....**

என்னை உங்களுக்கு அறிமுகம் செய்யத் தேவையில்லை என நினைக்கின்றேன். 74 வயதுடைய நான் 50ஆண்டுகளுக்கு மேல் அரசியலில் ஈடுபாடு கொண்டுள்ளேன். நான் எனது நாட்டையும், மக்களையும் மிகவும் நேசிப்பதோடு இலங்கைக்கு சமாதானத்தை கொண்டுவர தீவிரமாக உழைத்து வருகின்றேன்.

பொறுமையையும், அஹிம்சையும முன்னெடுப்பதற்காக யுனெஸ்கோவின 2006 ஆம் ஆண்டுக்கான மன்ஜித் சிங் விருது எனக்கே கிடைத்தது. கடந்த நான்கு ஆண்டு காலமாக எமது நாட்டுக்கு சமாதானத்தை மீளக் கொண்டுவர சிறந்த வழி எது என மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அம்முயற்சியில் பல்வேறு ஸ்தாபனங்களுள். பல்வேறு அரசுத் தலைவர்கள், வெளிநாடுகளின் தூதுவர்கள், மாட்சிமை தங்கிய இலங்கை ஜனாதிபதி, பல்வேறு சமயப் பெரியார்கள்-ஆகியோரோடு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல பிரமுகர்களுடன் பேசியும், எழுதியும் உள்ளேன். மிகவும் உபயோகமான நீண்ட பேச்சுவார்த்தைகளை பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடன் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு குறித்து பேசியுள்ளேன்.


எனது முயற்சியில் முழு வெற்றி காணாமையால் நாட்டின் பெரும்பகுதியினரை உள்ளடக்கி நிரந்தரத் தீர்வு பற்றி படித்து, தெளிவுபெற்று, அரசியல் இலாபம் தேடாது ஆதரிக்குமாறு வேண்டுகின்றேன். முன்பு சிலோன் என்று அழைக்கப்பட்ட இலங்கை சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலாயர்கள், பறங்கியர்கள் மற்றும் பிற சமூகத்தவர்களும் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டாது ஒருவரையொருவர் நேசித்தும், மதித்தும், சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ்ந்தனர்.

இன்று எமது நாட்டில் நடக்கின்ற கொடூர செயல்களை கண்டும், கேட்டும் வரும் இளம் தலைமுறையினர் எனது கூற்றை நம்பமாட்டார்கள். உண்மையில் நாங்கள் எமது நாட்டை பற்றி பெருமை கொண்டிருந்தோம். எங்களுககுள்ளே விரோதமோ, பொறாமையோ இருக்கவில்லை. பல்வேறு சமூகங்களுக்கிடையில் வெறுப்பையும், வேற்றுமையையும் வளர்க்கின்ற புதிய போக்கை அவதானித்த நான் கடந்த காலத்தில் எப்படி வாழ்ந்தோம், இழந்த பெருமையை எப்படி மீளப்பெற வேண்டும் என்பது பற்றி இன்றைய தலைமுறைக்கு கூறவேண்டிய தார்மிகக் கடமை எனக்குண்டு. எந்த நாட்டில் அமைதியாக வாழ்ந்தோமோ அங்கே தினமும் மரணங்களும், அழிவுகளும் இடம்பெறுகின்றன. ஒருநாள் தவறாது அப்பாவி மக்கள் கொல்லப்படுவதும் தலையில்லா முண்டங்கள் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த சடலங்களை வீதி ஓரங்களிலும், சதுப்பு நிலங்களிலும் சில வேளைகளில் அழுகிய நிலையிலும் காண்கின்றோம்.

ஒரே நேரத்தில் 100பேருக்கு மேல் இறந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஆண்கள், பெண்கள், பாலகுடிகள் உட்பட சிறுவர்களும் அடங்குவர். நிரந்தர பயத்துடனும், பீதியுடனுமே மக்கள் வாழ்கின்றார்கள். எந்த விலை கொடுத்தேனும் முதலாவதாக சமாதானத்தை அடைவதையே விரும்புகின்றனர். உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் குழப்பப்படாது இருந்திருந்தால் கடந்த 50 ஆண்டுகளில் ஒரு இலட்சத்திற்கு மேற பட்ட உயிர்களும் பல கோடானுகோடி பெறுமதியான சொத்துக்களும் இழக்கப்படாது காப்பாற்றியிருக்க முடியும். சில அரசியல் தலைவர்களின் முரட்டுப் பிடிவாதமே இத்தனை இழப்புக்கு காரணமாக இருந்துள்ளது. இந்த கொலைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டாமா? அதற்குரிய விடையை இளைய தலைமுறையினர் கூறட்டும்.

எமக்கு அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்போடு எம்மில் சிலர் எங்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் நாம் பாதுகாப்புடன் இருக்கின்றோம் ஆனால் ஒரு சாதாரண மனிதனுக்கு பாதுகாப்பில்லை. அவனே வீதி ஓரத்தில் இறந்து கிடக்கிறான். அவனே தன் மனைவி மக்களை பாதுகாக்க வேண்டியவனாக இருக்கின்றான ஆகவே நாம் அவனைப் பற்றித்தான் கவலைப்பட வேண்டும். எம்மத்தியில் ஆயிரம் பேரை பலி கொடுத்தும் தனக்கு புகழ் தேடக் கூடிய விடுதலைப் புலித்தலைவர் இருக்கின்றார். இரு கடிதங்களில் ஒன்று வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும், மற்றையது நாட்டு

தொடர்ச்சி 02ம் பக்கம



**புளொட் அமைப்பின் செயலதிபர் உமா மகேஸ்வரன்**

தமிழர்தேசிய உரிமைக்கான போராட்டத்தின் இரண்டு காலகட்டங்களின் பிரதிநிதி. யாழ் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட உமாமகேஸ்வரன் அவர்கள் நில அளவையாளராக பணியாற்றியவர். 70களின் முற்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையின் செயலாளராக இருந்தவர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் 70களின் நடுப்பகுதியில் அமைப்பு ரீதியாக செயற்படத் தொடங்கியபோது அதன் தலைவராக இருந்தவர். ஜனநாயக விரோதப்போக்குகள் தலையெடுத்ததனால் குறுகிய காலத்திலேயே பிரிந்து சென்று தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தை ஸ்தாபித்தவர். தந்தைசெல்வா, தந்தைபெரியார் ஆகியோரின் கருத்துகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்.

தமிழ் மக்களின் தேசிய இன உரிமைகளை வென்றெடுப்பதற்கு சிங்கள மக்களின் ஆதரவு தேவை என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொணடிருந்தார். தமிழர் போராட்ட நியாயங்களை முதன்முறையாக வானொலி மூலம் எடுத்துச்செல்வதில் புளொட் அமைப்பு குறிப்பிடத் தகுந்த பங்களிப்பை வழங்கியிருந்தது.

தமிழ் தேசிய இன உரிமைப்போராட்டம் ஆயுதமேந்திய எழுச்சியாக மாறுவதில் அவர் ஒரு முன்னோடி பாத்திரத்தை வகித்திருந்தார்.

சர்வதேச அளவில் ஒடுக்கப்பட்ட தேசங்களுடன் கரங்கோர்த்துச் செயல்படல் என்ற ரீதியில் பாலஸ்தீன விடுதலை இயக்கமொன்றின் பாசறைகளில் பெருந்தொகையான தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தோழர்கள் பயிற்சிபெற்றனர்.

ஒருபெரும் மக்களியக்கம் கட்டியெழுப்பபடவேண்டும் என்று அவர் பெரிதும் விரும்பினார்.

மலையகத்திலிருந்து புலம்பெயர்ந்து வன்னியில் குடியேறிய மலையக மக்களின் மறுவாழ்வில் அவர் பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். விஜயகுமாரதுங்க உட்பட தெற்கின் முற்போக்காளர்களுடன் அவர் உறவைப் பேணியவர். திரு.அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களுடன் அவர் நெருங்கிய உறவு கொண்டிருந்தார்.

தமிழில் எழுத்து சீர்திருத்தம் நவீன மயமாக்கம் என்பவற்றில் அக்கறை கொணடிருந்தார். புதிய தலைமுறைபோராட்டகாரர்களின் முன்னோடிகளில் ஒருவர்-அவர்.

தொடர்ச்சி 03ம் பக்கம

**தந்தை செல்வாவின் கனவுகளை நனவாக்குவோம்**

உதயசூரியன
Uthayasooryan

E-mail: uthayasooriyan_sl@yahoo.com Tel : 0602135912

## எமது சிந்தனையில்

நாட்டில் இப்போது எங்கு பார்த்தாலும் போர் எப்போது தொடங்கும் என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். காரணம் கிழக்கை வென்று விட்டோம் இனி வடக்கில்தான் யுத்தத்தினை ஆரம்பிக்க வேண்டும் படைகள் தயார் நிலையில் என அரசு தரப்பிலும், நாங்களும் இறுதி யுத்தத்திற்குத் தயார் என புலிகள் தரப்பிலும் அடிக்கடி அறிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. இதில் பெரிதும் பாதிக்கப்பட போவது அப்பாவி பொது மக்களே. இதை அனைவரும் நன்கு உணர வேண்டும்.

கிழக்கில் புலிகளை விரட்டியது போல் வடக்கில் புலிகளை வெல்வது என்பது மிகக் கடினம் என்பது அரச தரப்பிற்குத் தெரியும். ஒரு நீண்டகால போராகவே இது அமையும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அப்பாவி மக்களின் நிலை என்ன? இதை இரு தரப்பினரும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த யுத்தத்தின் மூலம் அரசியல் தீர்வு எதனையும் கொண்டுவர முடியாது. மாறாக பாரிய பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படும். மிகப் பெரியளவில் பொருளாதார நெருக்கடி ஏற்படும். இதை உணர்ந்து கொண்டு நாம் அனைவரும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஓர் அமைதியான நிரந்தரத் தீர்வு ஏற்பட ஒத்துழைக்க வேண்டும்.

அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், எழுத்தாளர்கள், மதத் தலைவர்கள் அனைவரும் ஒரே சிந்தனையில் இதற்கு ஒத்துழைப்பு நல்கி போரைத்தரடுத்து நிரந்தரத் தீர்வுக்கு வழிசமைக்க வேண்டும். இல்லையெனில் நாடு சுடுகாடாகிவிடும். இதில் ஊடகங்களும் நடு நிலையுடன் நடந்து கொண்டு ஒத்துழைப்பு நல்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். நாளுக்குநாள் பெருகிவரும் ஆட்கடத்தல்கள், கொலைகள், நிறுத்தப்பட வேண்டும். இந்த காட்டுமிராண்டித்தனமான செயலை யார் செய்தாலும் அவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். பொது மக்கள் நிம்மதி பெருமூச்சு விட வேண்டும். எந்தவொரு பிரஜையும் நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் சென்றுவரக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாசைகளை நிறைவு செய்து அவர்களை திருப்திபடுத்த வேண்டியது அரசின் கடமையாகும். அவ்வாறானதொரு தீர்வுத்திட்டத்தினையே அரசு முன்னெடுக்க வேண்டும். கடந்த காலங்களைப் போலல்லாமல் இந்த முறையாவது இறுதியான உறுதியானதொரு தீர்வுத் திட்டத்தினை அரசு முன்னெடுத்து போர்ச்சூழலில் இருந்து பொது மக்களை காக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கே உரியது. புலிகளிடம் நாம் பெரும் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

எனவே சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் அவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதும், தமிழ் மக்களை திருப்திப்படுத்தக் கூடியதுமான ஒரு நிரந்தரத் தீர்வுத் திட்டத்தினை முன் வைத்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டிய மிகப் பாரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என்ற உணர்வுடன் செயற்பட வேண்டியதே இன்றைய காலகட்டத்தின் முக்கிய தேவையாகும்.

## சமஷ்டி அல்லது இந்திய......

01ம் பக்கத் தொடர்ச்சி

...த்துக் கொண்டனர். தமது துப்பாக்கி பலத்தை பிரயோகித்து அச்சுறுத்தி மிரட்டி படிப்படியாக தமிழ் மக்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து அவர்களுடைய ஜனநாயக உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் பறித்தெடுத்ததோடு மனித உரிமை மீறல்களும் அதிகளவில் இடம்பெற்றன.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் எண்ணெய் சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாகும். ஜூன் மாதம் 22ம் திகதி திரு பிரபாகரனுக்கு எழுதப்பட்ட கடிதம் இன்று வெளியிடப்படுகின்றது. முன்னைய கடிதங்களில் குறிப்பிடப்படாத பல விடயங்கள் பற்றி எழுதியமையால் அது நீண்ட கடிதமாக அமைந்துவிட்டது. முன்னைநாள் மேயரும் யாழ் எம்.பியுமாக இருந்த அல்பிரட் துரையப்பா கொலை தொடக்கம் அவருடைய சாதனைகளை திரும்பிப் பார்க்கவும். அவருடைய கண்களைத் திறக்கும் நோக்குடன் இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கும் நாட்டுமக்கள் அனைவருக்கும் ஏற்படுத்திய அழிவுகள் பற்றி பட்டியல் போட்டுக் காட்டியுள்ளேன் அவருக்கு இரக்கம் இருந்தால் கண்ணீர்விட்டு தனனுடைய கொடிய செயலகளை கைவிட்டு இதுவரை காலமும் செய்தவற்றை எண்ணி வருந்தி புதிய பாதையில் செல்லுமாறு கேட்டுள்ளேன்

நாட்டு பிரிவினை கோரிக்கையை கைவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஸ்டி அடிப்படையிலான தீர்வை ஏற்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளேன். 50 ஆண்டுகளக தீர்க்கப்படாத பிரச்சனை மேலும் சிக்கலடைந்த பின் ஒற்றையாட்சியின் கீழ் ஒரு தீர்வை ஏற்குமாறு நான் அவரை கேட்க மாட்டேன். இக்காரணத்தினாலேயே சமஷ்டி என்றோ ஒற்றையாட்சி என்றோ விபரிக்கப்படாத இந்திய ஆட்சிமுறையிலான ஒரு தீர்வை ஏற்குமாறு நான் பிரச்சாரம் செய்து வருகின்றேன.

மேலும் எமது மக்களில் சிலர் ஒற்றையாடசி சம்ஸ்டி ஆட்சி ஆகிய பதங்களில் வெறுப்பு கொண்டுள்ளமையல் நான் அவ்வாறு கூறியுள்ளேன. வேற்றுமையில் ஒற்றுமை என்ற அடிபடையிலேயே தமது அரசியல் சாசனம். உருவாக்கப்பட்டதென இந்தியர்கள் பெருமையாக கூறுவார்கள்.

கடந்த 3 ஆண்டு காலமாக நம்நாட்டு சிங்கள தமிழ் முஸ்லிம்கள் ஆகிய பலரை உள்ளுரிலும் வெளிநாட்டிலும சந்தித்து இந்திய முறையிலான அரசியல் சாசனமே எம் நாட்டுக்கு பொருத்தமானதென கூறி வந்துள்ளேன். உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாகிய இந்தியாவில் அதிகப்படியான மக்கள் இந்துக்களாக இருந்தபோதும் பெரிதாக மதிக்கப்படும் கண்ணியம் மிக்க ஒரு இஸ்லாமியர் அந்நாட்டின் தலைமை பதவியை வகிக்கின்றார். நிச்சயமாக அதுபோன்று எம நாட்டில் நடைபெறாது. என்பதை கூறும் அதே வேளை அப்பேற்பட்டநிலமை எதிர் காலத்தில் எமது நாட்டிலும் உருவாக வேண்டும்.

காலத்துக்கு காலம் இந்தியா அயலிலுள்ள இஸலாமிய நாடுகளுடனும் உள்ளுர் இஸ்லாமியர்களுடனும் பிரச்சினைப்படுவதை நாம் அறிந்துள்ளோம். இருப்பினும் ஓர் இஸ்லாமியரே ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார். இந்தியாவில் சீக்கிய மக்கள் இரண்டு வீதத்தினரே இருந்தபோதும் மிகவும் மதிக்கப்படுகின்ற ஒரு "சீக்கியரான காலநிதி மன்மோகன் சிங் அந்நாட்டு பிரதம மத்திரிப்பதவியை வகிக்கின்றார். முன்னாள் இந்தியப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்களின் வெளிநாட்டு மருமகள் ஆளுங்கூட்டணியின் தலைவியாக பதவி வகிக்கின்றார். சிங்களவாகள் அல்லாதோர் இந்த நாட்டைவிட்டு வெளியேறவேண்டும் என்று கூறும் ஒரு சிலர் வாழும் இந்நாட்டில் இவ்வாறான நிலைமை சாத்தியமாகுமா? இந்தியாவிடமிருந்து நாம படிக்கவேண்டிய பாடங்கள் பல உண்டு.

சமஸ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை முன்வைப்பதோ அல்லது என்னால் ஆலோசனை வழங்கப்பட்ட இந்திய முறையிலான தீர்வை முன் வைப்பதே அரசுக்குள்ள ஒரேயொரு வழி. விடுதலைப்புலிகளை ஓரங்கட்டக் கூடிய மீண்டும் எதிர்காலத்தில் புதிய போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய அவசியமற்ற ஒரு நிரந்தரத் தீர்வாகவே முன்வைக்கும் தீர்வு அமைய வேண்டும் ஒஸ்லோ உடன்படிக்கையின்படி சமஸ்டி அடிப்படையிலான தீர்வையே அரசு முன்வைக்க கடமைப்பட்டுள்ளது. இந்திய முறையிலான தீர்வைத் தவிர எந்த முறையிலான தீர்வை முன்வைத்தாலும் அது சர்வதேச சமூகத்திற்கு திருப்தியளிக்காது. தனிநாட்டு கோரிக்கையை கைவிட்டு ஒரு நியாயமான தீர்வை விடுதலைப்புலிகளை ஏற்க வைப்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு எமக்கு தேவைப்படும்.

இந்த நாடு பிளவுபடக் கூடாதென்பதே மக்களின் பொதுவான அபிப்பிராயமாகும். அந்த நிபந்தனைக்கமைய இன மத வேறுபாடின்றி ஒன்றுபட்ட இலங்கைக்குள் சம உரிமையுடன் எல்லோரும் வாழவேண்டும் என்பதே அனைவரின் ஒன்றுபட்ட கருத்தாகும்.

எவரேனும் எத்தகைய பாகுபாட்டை திணிக்க முயற்சித்தாலும் அம் முயற்சி என்றும் சமாதானத்தை கொண்டுவர உதவாது.

மக்களுக்கு எழுதிய இக்கடிதமாகும். இவ்விரு கடிதங்களும் அனைவரும் படித்து தீர்மானம் எடுக்கக் கூடிய வகையில் இரு கடிதங்களும் ஒன்றாக பிரசுரிக்கப்படுகின்றன. எமக்கு சமாதானம் வேண்டுமாயின் அதற்கான தீர்வு என் கடிதங்களிலே உண்டு. திரு பிரபாகரனுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அவர் எவ்வாறு தமிழ் சமுதாயத்தை குட்டிச்சுவராக்கியதுடன் ஒவ்வொருவருக்கும் துன்பத்தையே தேடித்தந்தார். படிப்படியாக அவர் எவ்வாறு தமிழ் சமூகத்தை அடிமைப்படுத்தினார் என்ற விடயமும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியாயமாக சிந்திக்கும் தமிழர் அல்லாத ஒருவர் அவருக்கு எழுதப்பட்ட கடிதத்தை படிப்பாரேயானால் தமிழ் சமூகம் படுகின்ற துன்பத்தை அறிந்து கண்ணீர் விடுவதோடு அவர்களை மீட்டெடுத்து அவர்களுடன் சமமாக, சமாதானமாக வாழவே விரும்புவார்கள்.

நான் சிங்கள, தமிழ், இஸ்லாமிய மக்களுடன் நீண்டகாலம் வாழ்ந்து, சிங்கள தமிழ் முஸ்லிம் மாணவர்களுடன் ஒன்றாக கல்வி பயின்று மேலும் சிங்கள, முஸ்லிம், தமிழ் ஆசிரியர்களால் கல்வி போதிக்கப்பட்டு சிங்கள, தமிழ் மாணவர்களுக்கு கல்வியும போதித்தவன். ஆகவே எதுவித பிரச்சினையுமின்றி நாம் சமாதானமாக எல்லோரும் வாழ முடியும் என்று திடமாக நம்புகின்றேன்.

எனது இவ்விரு கடிதங்களையும் ஒவ்வொருவரும் படித்து உண்மையை அறிய வேண்டும் என வேண்டுகின்றேன். எனக்குத் தெரிந்த எதையும் மிகைப்படுத்தாத உண்மையான விடயங்களையே குறிப்பிட்டு மிக அவதானமாக எழுதப்பட்ட கடிதங்கள்.

எமக்கு தேவைப்படுவது 1957 ஆம் ஆண்டு இருந்த பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வே. இரு பிரதான அரசியல கட்சிகளும் தமிழ் பேசும் மக்களின் காலை வாரிவிட்டு நாட்டுக்கு பெரும் அபகீர்த்தியை எவ்வாறு ஏற்படுத்தினர் என்பதையும், அதனாலேயே 70 ஆயிரம் உயிர்ச்சேதத்தையும் பல கோடி பெறுமதியான சொத்துக்களையும் நாடு இழந்தது என்பதை இழந்தலைமுறையினர் அறியவேண்டும். எமது நாடு இழந்த கௌரவத்தை நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து மீளப்பெற வேண்டும்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை முன்வைக்கத் தவறியமையால் விடுதலைப் புலிகளிடம் தயவில் வாழவேண்டி ஏற்பட்ட நிலைமையை பிரபாகரனும் அவருடைய சகாக்களும் தமக்கு சாதகமாக பாவி...

## 11-05-1989 பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரை

### திரு. அ. அமிர்தலிங்கம்

இந்த நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளின் மிக மிக இக்கட்டான கட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதை உறுப்பினர்களின் கவனத்தினைக் கோரி முடித்துக்கொள்ள முறபடுகிறேன் கௌரவ அமைச்சர் அவர்களை நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆனால் அதை இப்பொழுது எமக்குத் தெரிவிக்கமாட்டார். இச் செயல்முறைக்கு புலிகளையும் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நாங்கள் மன வேற்றுமைகளைத் தூண்டிவிடாது இருப்போமாக. அதை நாம் செய்துள்ளோம். அதை நாம் மறக்கவில்லை. அதே வழியில்தான் நாம் தொடர்ந்தும் செயற்படப் போகிறோமா? விசேடமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு கோரிக்கை விட விரும்புகிறேன்.

இந் நாட்டில் அதிகாரப் பரவலாக்கத்தினை அல்லது ஏதாவது ஒரு சமஷ்டி அமைப்பினை அரசியல் தத்துவமாகக் கொண்டிருந்த அரசியல்வாதி காலம்சென்ற திரு பண்டாரநாயக்கா என்பதனை நான் ஏற்கனவே கூறியிருந்தேன். அவரின் உண்மையான கருத்தினை நான் அறிவேன் பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு எதிராக யு.என்.பி யினால் கட்டியெழுப்பப்பட்ட சக்திகளும், பின்னர் அவரை ஆதரித்த சக்திகளும் இல்லாவிடின் (குறுக்கீடு) ரொஸ்மீட் பிலேசில் உள்ள அவரது இல்லத்தில் புத்திரகித்தவின் தலைமையில் புத்த குருமாரும், மற்றையவர்களும் சென்று சத்தியாக்கிரகம் செய்தது 1958 ஏப்ரல் 8ம் திகதி என எண்ணுகிறேன். புத்திரகித்த தேரோ இவ்வியக்கத்தின் தலைவராக இருந்தார். பின்னர் கொலை குற்றத்தில் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டவரும் புத்தரகித்தரே. இவர்கள் அவரின் இல்லத்தில் சத்தியாக்கிரகம் செய்தனர். இத் தூண்டுதலின் காரணமாக இவ்வொப்பந்தத்தினை செயல் இழக்க வைக்க வேண்டிய நிலையில் தாம் இருப்பதாகக் கூறினார். அது அப்பிரச்சினையை முடிவாக்கியது. அவர் எத்தகைய மன வேதனையோடு அதை செய்தார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதன் பின்னும் அவர் உயிரோடு இருந்திருந்தால் அத்தகைய வழியில் ஒரு தீர்வினுக்காக செயற்பட்டிருப்பார். மாகாணச்சபைத் திட்டமானது நீங்கள் இதை கிராமிய சபைகள் அல்லது வேறு பெயரில் அழைத்தாலும் அடிப்படையில் பண்டாரநாயக்காவின் கருத்துக்களைக் கொண்டதாக நான் எண்ணுகிறேன். எனவே யூ.என்.பி யை எதிர்ப்பதற்காக மாத்திரம் பண்டாரநாயக்காவின் கட்சி, பண்டாரநாயக்காவின் கொள்கைகளை எதிர்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இந் நாடடின் இரு இனங்களுக்கு இடையேயான உறவு சம்பந்தமான பிரச்சினை இது. எனவே அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் என்னும் அடிப்படையில் இம் முயற்சியினை மேற்கொள்ள முற்படுவோம். இது பூரணமாக திருப்திகரமானது என நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. இதை நாம் கூறியுள்ளோம். இது திருத்தப்படலாம். திருத்தப்பட வேண்டும். எனவே இப் பிரச்சினைகளில் செயற்படுவோம். உண்மையில் எதிர்காலத்தில் அதிகாரப் பரவலாக்கல் எனும் திட்டம் முன்னேற்றம் அடையும் வேளையில் தெற்கில் உள்ள மாகாண சபைகளும் கூடுதலான அதிகாரங்களைக் கோரும் எனவே, இதற்கான வழிகளுக்கு தடைகள் போடாமல் இருப்போமாக எதிர்த் தரப்பினரின் கருத்துக்களையும் இணைத்தக் கொள்வதற்காக நீங்களே முன் வைத்த இம்மசோதாவிற்கு யாராவது ஆட்சேபனை கிளப்பினால் அல்லது திருத்தங்களை அறிமுகம் செய்தால் அது சம்பந்தமாக கிலி அடைய வேண்டாம் என அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

# எம் இதயங்களில்........

01ம் பக்கத் தொடர்ச்சி

70 களிலும் 80 களின் முற்பகுதியில் தமிழ் இளம் தலைமுறையினரால் பெரிதும் ஈர்க்கப்பட்ட இளந்தலைவர். யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளம் போராட்டக்காரராகவும் திகழ்ந்த யோகேஸ் 1981 இல் யாழ் நூலகம், ஈழ நாடு அலுவலகம். யாழ் நகர சந்தை என்பன எரியூட்டப்பட்டு ஆங்காங்கே மக்கள் சுடப்பட்டு கொல்லப்பட்டுக் கொண்டுமிருந்த அந்த அரச பயங்கரவாத அராஜகம் நிகழ்ந்துகொண்டிருந்த நாட்களில் உயிராபத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவரது வீட்டினுள் புகுந்த பொலிசார் அவரையும் மனைவியையும் சுட்டுக்கொல்ல முயன்றபோது அவரும் அவரது மனைவி சரோஜினி யோகேஸ்வரனும் பின்புறமாக தப்பித்துக் கொண்டனர். அவரது வீடு எரியூட்டப்பட்டது. வீதியில் வருவோர் போவோரது சைக்கிள்கள், வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டு இவரது வீட்டின் முன்னால் குவிக்கப்பட்டன.

இவர் கொழும்பில் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுடன் ஒன்றாகவே புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

இவரது மனைவியாரும் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியையாகவும், பின்னர் 90 களின் பிற்பகுதியில் யாழ் மாநகரசபை முதல்வராகவும் கடமையாற்றிய சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் இக்காலப் பகுதியிலேயே நல்லூரில் அவரது



## வெ. யோகேஸ்வரன்

வாசஸ்தலத்தில் வைத்து தமிழீழ விடுதலை புலிகளால் படுகொலை செய்யப்பட்டார். திரு யோகேஸ்வரன் அவர்களுக்கு குழந்தைகள் எவரும் இல்லை. யாழ்ப்பாணத்தின் பிரபல மருத்துவரான டாக்டர் வெற்றிவேல் அவர்களின் புதல்வராவார்.

---

தமிழர்கள் பெருமை கொள்ளுமளவிற்கு புகழ்பூத்த பேரறிஞர். சர்வதேசம் அறிந்த அரசியலமைப்பு நிபுணர். சர்வதேச கற்கை நெறிகளுக்கான நிலையத்தை இலங்கையில் நிறுவியவர். அதிகாரப் பகிர்வு தொடர்பாக தேச நிர்மாணம் தொடர்பாகவும் இடையறாத பங்களிப்பை கால்நூற்றாண்டுகளுக்கு மேலாக வழங்கி வந்தவர். இலங்கையில் 1990 களின் நடுப்பகுதியில் சமஷ்டி முறையிலான தீர்வு தொடர்பான எண்ணக் கருக்கள் வலுவடைவதில் நீலனின் பங்கு குறிப்பிடத்தகுந்தது. சர்வதேச அனுபவங்கள் எமது உள்நாட்டு யதார்த்தங்களுக்கு ஏற்ப இலங்கையின் பல இன சமூகங்கள் சுயமரியாதை கௌரவத்துடன் வாழ்வதற்கான நெறிமுறைகளை உருவாக்குவதில் மனித பெறுமானங்களை உருவாக்குவதில் அவர் பங்களித்திருக்கிறார்.

ஒரு சட்ட நிபுணர் கல்வியாளர் என்பதற்கப்பால் அவர் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலத்தில் மனித அவலங்கள் தொடர்பாகவும் அரசியல் யாப்பு விவகாரங்கள் தொடர்பாகவும் காத்திரமான நேர்த்தியான உரைகளை ஆற்றியிருக்கிறார்.

வடக்கு கிழக்கில் அம்பாறை மாவட்டம் அவரின் கவனத்தை பெரிதும் ஈர்த்திருந்தது. அங்குள்ள பல்லின நிலைமைகளில் மக்களிடையே நல்லுறவை வளர்ப்பதில் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். உலகின் ஏதோவொரு மூலையில் சகல சௌபாக் கியங்களுடனும் அவர் மிகச் சௌகரியமாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் வெடிகுண்டு களும், மரணமும் அதிகாரம் செலுத்தும் தேசத்தில் சமாதானத்தையும் மனித உறவு களையும் மேம்படுத்த அவர் பாடுபட்டார்.

மனித வாழ்க்கை என்பது அதிகூடியபட்சம் ஏழு எட்டு தசாப்தங்கள்



## கலாநிதி நீலன் திருச்செல்வம்

என்று இருக்கும் போது தாம் வாழும் சமூகத்தின் அவல நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு தன்னாலான பங்களிப்பை செய்ய வேண்டுமென நினைக்கும் மனிதர்கள் எப்போதும் வெகு சிலராகவே இருக்கிறார்கள். அந்த வெகு சிலர்களின் ஒருவரான நீலனை படுகொலை செய்ததன் மூலம் தாம் எவ்வளவு அநாகரிகமானவர்கள், கண்ணியமான மனித வாழ்விற்கு பொருத்தப்பாடில்லாதவர்கள் என்பதை தற்கொலை குண்டுதாரி மூலம் நீலனை பலிகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் நிரூபித்திருக்கிறார்கள்.

நீலனின் கனவு எழிலார்ந்த வாழ்க்கை பற்றியது. அத்தகைய உன்னத கனவை கொண்ட மனிதர் மீதான படுகொலை தாக்குதல் எமது சமூகம் எவ்வளவுதூரம் காட்டுமிராண்டி மயப்பட்டிருக்கிறது என்பதை உணர்த்தி நிற்கிறது.

---

ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபா தமிழ் மக்களின் தேசிய இன உரிமைகளுக்கான போராட்டத்துடன் இலங்கை தழுவிய சமூக மாற்றம், சர்வதேச ஒடுக்கப்பட்ட மக்களுடனான உறவு என்ற உயரிய லட்சியங்களுடன் செயல்பட்டவர்.

1970 களின் முற்பகுதியில் தமிழ் மாணவர் பேரவையின் உருவாக்கத்துடன் அவரது அரசியல் பயணம் ஆரம்பமாகியது. அன்றிலிருந்து 1990 ஜூன் 19 இல் படுகொலை செய்யப்படும் வரை ஓய்வொழிச்சலின்றி மக்களின் சுதந்திரத் திற்காக பணியாற்றியவர். சமூகத்தில் நலிவுற்ற பிரிவினரை, அடித்தட்டு மக்களை அணிதிரட்டி ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமையில் சமூக மாற்றத்திற்கான போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமென்று அவர் திடமாக நம்பியவர். அதற்கான செயற்பாட்டை முழு வீச்சுடன் முன்னெடுத்தவர்.

மலையக தோட்டத் தொழிலாளர்கள், யாழ்ப்பாணத்து கிராமிய விவசாயிகள், மட்டக்களப்பு, அம்பாறை, திருமலையின் விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், மற்றும் உழைப்பாளர்கள், கல்விமான்களென அனைத்துத் தரப்பினரையும் அணிதிரட்டுவது மாத்திரமல்லாமல் சிங்கள மக்கள் மத்தியில் சமூக மாற்றத்தை விளைந்து நின்ற முற்போக்காளர்களுடன் நேச உறவையும், இந்தியாவின் இடதுசாரி இயக்கங்கள், சர்வதேச விடுதலை போராட்ட அமைப்புக்களுடன் நட்புறவையும் அவாவி நின்றவர். அவரது லட்சியம் பரந்த நோக்கங்களை கொண்டிருந்தது. மனித குலத்தின் நல்வாழ்வு சுபிட்சமான எதிர்காலம் என்பன அவரின் கருத்துக்களிலும், நடைமுறைகளிலும் இழையோடின.



## க. பத்மநாபா

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடாக ஒரு அதிகாரப் பகிர்வு கட்டமைப்பு இலங்கையில் செயற்படுத்துவதற்கு அவர் காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தார். பின்னடைவுகள் சீர்குலைவுகள் ஏற்பட்ட போதும் அவர் சோர்ந்துவிடவில்லை. தனது பணியை தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்.


வாழ்க்கை பற்றிய உன்னத கனவுகளை காண்பவர்களை அதற்காக செயற்படுபவர்களை தமிழ் புலிகள் எப்போதும் சகித்துக் கொண்டதில்லை. அதனால்தான் சென்னை மண்ணில் தோழர் பத்மநாபாவும் பன்னிரண்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர்கள், உறுப்பினர்களும் சென்னை யில் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களின் பௌதீக வாழ்வு அழிக்கப் பட்டிருந்தாலும் அவர்களின் கருத்துக்கள் என்றென்றும் நிலைத்திருக்கும்.

---

திருமலை என்றால் அமரர் தங்கதுரை அவர்களின் பெயரே முதலில் ஞாபகத்துக்கு வரும். கிளிவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட தங்கதுரை அவர்கள் திருமலையின் குறிப்பாக தற்போது இடம்பெயர்ந்து பேரவலங்களை சந்தித்திருக்கும் மூதூர் தேர்தல் தொகுதி மக்களுடன் நன்கு பரிச்சயமானவர். அவர்களுடன் உள்ளும் உடனும் வாழ்ந்தவர்.

திருமலையின் அபிவிருத்தி பிரதேசத்தின் சனத்தொகை அமைப்பை மாற்றியமைக்கும் குடியேற்றத் திட்டங்களை எதிர்த்து இடையறாது போராடி வந்தவர். திருமலையின் பின்தங்கிய கிராமங்களின் சமூக பொருளாதார, அபிவிருத்தி தொடர்பில் இடையறாத அக்கறை காட்டியவர். அவர் பாராளுமன்றத்தின் உள்ளும் வெளியிலும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காக அகிம்சை வழியில் குரல் கொடுத்தவர்.

இன்று திருமலையின் மக்கள் அகதிகளாக மட்டக்களப்பிற்கும், இந்தியாவிற்கும் அலைந்து கொண்டிருக்கும் அவலமான சூழ்நிலையில் நாம் தங்கத்துரை அவர்களை நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கிறோம். அது ஒரு மிகப் பாரிய வெற்றிடம். தமிழீழ விடுதலைப் புலிகள்



## த. தங்கத்துரை

தங்கதுரை அவர்களை படுகொலை செய்தது மாத்திரமல்லாமல் திருமலை மக்களையும் பாரிய மனிதாபிமான நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது. தங்கதுரை போன்றவர்களை அழித்து திருமலை் மக்களை இன்று அவலத்தினுள் தள்ளியிருப்பதும்தான் புலிகள் மக்களுக்கு பெற்றுக்கொடுத்தது.

---

## கேள்வி:- ஒற்றையாட்சியின் கீழ் இப் பிரச்சினைக்கு தீர்வொன்றை காணமுடியும் என நினைக்கிறீர்களா?

பதில்:- நான் நம்பவில்லை. ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்ற ஒரு தீர்வைக் காண முடியாது. சில முக்கியமான மாற்றங்கள் ஜெயவர்த்தனாவின் அரசியலமைப்பில் செய்ய வேண்டும். ஆனால், அதை ஒரு சாட்டாக வைத்து அரசியல் தீர்வு பற்றி சிந்திக்காமல் இருக்கக்கூடாது. நாம் அரசியல் தீர்வைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதனடிப்படையில் முடிவுகளை எடுக்க வேண்டும். அந்த முடிவுகளை நடைமுறைப்டுத்த அரசியல் சட்டம் மாற்றப்பட வேண்டும்.



என்னுடைய கருத்து என்ன வென்றால் இரண்டு பெரிய சிங்கள கட்சிகளும் தமிழ் கட்சிகளும் இதை மாற்றலாம். சர்வஜன வாக்கெடுப்பு வேண்டுமென்றால் அதிலும் வெற்றி பெறலாம்.

இந்த அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்காக என்றால் மக்கள் நன்மைக்காக அதனை மாற்ற வேண்டுமென்றால் அதனைச் செய்யத்தான் வேணடும்.

இன்றைய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் ஓர் பூரணமான அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள முடியாது. தமிழ் மக்களின் கோரிக்கைகளை அறிந்து அதற்கு தடை போடுவதற்காக இவர்கள் உருவாக்கிய அரசியலமைப்பு இது.

மும்முனைப் பேட்டி- த.வி.கூ தலைவர் மு. சிவசிதம்பரம் அருவி சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலிருந்து

---

கேதீஸ்வரன் லோகநாதன் அவர்கள் தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பங்கொன்றை ஆற்றியவர். கடந்த 20 வருடங்களில் அவரது புலமைத்துவ பங்களிப்புக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. திம்பு, டெல்லி, கொழும்பு என இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் தனது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கி வந்தவர். இராஜதந்திர வட்டாரங்களிலும் இந்திய இலங்கை அரசியல் தலைவர்கள், கல்விமான்கள் மத்தியிலும் அறிமுகமானவராகவும் பெரிதும் நேசிக்கப்பட்டவராகவும் கேதீஸ் விளங்கினார்.

இழந்த சந்தர்ப்பங்கள் என்று அவர் கடந்த 60 ஆண்டுகளில் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் எவ்வாறு நழுவ விடப்பட்டன என்பதை விபரித்து ஒரு நூலை ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். அவர் சமூக ஆய்வாளர் மன்றத்தின் அங்கத்தவராக ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவர்களில் ஒருவராக கொழும்பு பல்கலைகழகத்தின் ஆய்வாளராக, பத்திரிகையாளராக மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் இயக்குனராக, இலங்கை சமாதான செயலகத்தின் பிரதித் தலைவராக என பல்வேறு தளங்களில் வெவ்வேறு



## கேதீஸ்வரன் லோகநாதன்

காலகட்டங்களில் செயற்பட்டார். ஈ.பி.ஆர்.எல்.எப் இல் செயற்பட்ட காலம் மாத்திரம் ஒன்றரை தசாப்தம்.

அவர் தனது சமூகப்பணிகளின் சகல காலகட்டங்களிலுமே பல்லினங்களின் தேசம், அதிகாரப் பகிர்ந்தளிப்பு பற்றிய இடையறாத விழிப்புணர்ச்சியுடனேயே செயற்பட்டார். அதற்காகவே அவர் தமிழீழ விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

# இனப்பிரச்சனைக்கான தீர்வு இனிமேலும் இழுத்தடிக்கப்பட முடியாதது

தமிழர் விடுதலைக் கூட்டணி அகிம்சை வழியில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கடந்த இரண்டு தசாப்தங்களாக வலியுறுத்தி வந்திருக்கிறது. பிரதானமாக இணைந்த வடக்கு கிழக்கு நிலம் மீதான அதிகாரம், தமிழ் மொழிக்கு சிங்கள மொழியுடன் சம அந்தஸ்த்து தவிர கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய விடயங்களில் இன வீதாசாரம் பேணப்பட வேண்டுமென்ற நிலையையே எடுத்து வந்திருக்கிறது.

இந்த விடயங்களைப் பற்றி எமது காலஞ்சென்ற அல்லது படுகொலை செய்யப்பட்ட தலைவர்கள் பல்வேறு காலகட்டங்களில் மிக நீண்ட கலந்துரையாடல்கள், உரைகள் எழுத்து வடிவிலான ஆவணங்கள் அகிம்சை வழியிலான போராட்ட விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் மூலம் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிபுணத்துவ ஆற்றல் எப்போதும் இந்த அதிகாரப் பகிர்ந்தளிப்பு விடயத்தில் உயரிய பங்களிப்பை வழங்கி வந்திருக்கிறது. உதாரணமாக சந்திரிகா அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னான வருடங்களில் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வொன்றை மேற்கொள்வதற்கான வரைபுகளை உருவாக்குவதில் எமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான நீலன் திருச்செல்வம் அவர்கள் வழங்கிய பங்களிப்பு உலகறிந்ததே. ஆனால் அதற்காகவே தமிழீழ விடுதலைபபுலிகள் நீலனை தற்கொலை குண்டுதாரி மூலம் படுகொலை செய்தனர்.

எமது பெருந்தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினூடான அதிகார பகிர்வு செயற்பாட்டை ஆதரித்ததற்காகவும், அதற்கு பங்களித்ததற்காகவுமே தமிழீழ விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

நாம் ஒன்றை தெளிவாக இங்கு விளங்கிக் கொள்ள வேண்டும். எந்த ஆக்கபூர்வமான அதிகாரப் பகிர்வு செயன்முறையையும், அதனை உருவாக்குவதற்கான மனப்பூர்வமான செயற்பாட்டாளர்களையும் என்றென்றும் புலிகள் சகித்துக் கொண்டதில்லை.

அதிகாரப் பகிர்ந்தளிப்பு, மனித உரிமை, ஜனநாயகம் இவற்றைப்பற்றி பேசியதற்காக, ஈடுபாடு செலுத்தியதற்காக பல நூற்றுக்கணக்கானோர் தமிழீழ விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

நிலைமை இந்த லட்சணத்தில் இருக்கும் போது புலிகள் இனப்பிரச்சனை தீர்விற்கு பங்களிப்பார்கள் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது.

தீர்வு 60 ஆண்டுகளுக்கு மேலாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கும், ஏனைய சிறுபான்மை சமூகங்களுக்குமே தவிர புலிகளுக்கல்ல.

இப்போது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு தனது யோசனைகளை முன்வைப்பதற்கான நிலைமைகள் உருவாகியுள்ளன.

ஆனால் அந்த யோசனைகள் பெருவாரியான தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதாக இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆலோசனைகளை கருத்திற்கெடுத்ததாக அமைய வேண்டும்.

எமது தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் இந்திய முறையிலான அதிகாரப் பகிர்வை மிக நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருபவர். எனவே தீர்வு அர்த்தபுஷ்டியானதாக அமைய வேண்டும். தமிழ் மக்களின் பாதுகாப்பு, வாழ்விடம் தொடர்பான அபிலாசைகள் மிகுந்த கவனத்துடனும் கரிசனையுடனும் அணுகப்பட வேண்டும். பிராந்திய மட்டத்தில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

யதார்த்தபூர்வமானதும் துணிச்சலானதுமான முயற்சிகளினூடாகவே இலங்கையில் இனங்களின் ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடியும். வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

இந்த துணிச்சலும், தீர்க்கதரிசனமுமான நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். 60 வருடங்களுக்கு மேலாக இந்த பிரச்சினைகளுடன் வாழ்ந்தாயிற்று. இனி மேலும் அவ்வாறு வாழ முடியாது.

இந்த நாட்டில் சிங்கள தமிழ், முஸ்லீம், மலையக பறங்கி, மலாய் என அனைத்து இன மக்களினதும் சுதந்திரமான ஐக்கியமான வாழ்வொன்றை கட்டியெழுப்புவதற்கு எம்மை அர்ப்பணிப்போம்.

# கண்ணீரால் நான் வரையும் கடிதம் ஒன்று கடவுளுக்கு

கன்னியா குமரியின் காவலனாய் நாம் போற்றும்
கோணேசா உன் கண்கள் குருடாகி விட்டனவா
நான்குபுற கடல் சூழ நடுவே உச்சிமலை
உச்சிமலை மத்தியிலே உமக்கமைந்த ஆலயத்தில்
வீற்றிருக்கும் உந்தனிடம் வினைதீர்க்க வேண்டுகின்றோம்.
காட்டு மிராண்டிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட
கோரப்படுகொலைகள் கோணேசர் பூமியிலும்
நாமென்ன குறைசெய்தோம் நாசகாரக் கூட்டத்திற்கு
தாலிகளை அறுக்கின்ற தமிழீழப் போராட்டம்
பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களின் ஓலம்
கணவர் தமை இழந்த கன்னியரின் கதறல் அங்கே
பெற்றோரை பறிகொடுத்த பிள்ளைகளின் ஓலம்
ஏனிந்த சோதனை எம் தமிழ் மக்களுக்கு
என்னையே நான் பார்த்து இரு கேள்விகள் கேட்கின்றேன்.
கடவுளா விடை தருவார்? (அல்ல)
காலமா விடை பகரும்?

திருமலை மத்தியிலே திருக்கோயில் கொண்டிருக்கும்
கன்னியரின் காவலராம் காளி மகாதேவியென
விண்ணோர்கள் அனைவருக்கும் வீரமகா காளியென
பெண்குலத்தார் அனைவருமே பெருமதிப்பு வைத்திருக்கும்
தாயே உனக்கென்ன தவறுகள் செய்தனரோ
காட்டுமிராண்டிகளின் காவலராய் நீமாறி
விதவையரின் கண்ணீரில் வேண்டுகிறாய் அபிசேகம்
பெண்குலத்தின் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகையில்
இன்னும் அம்மண்ணில் எத்தனையோ வேதனைகள்

நீதியை நிலைநாட்ட நீயேன் தயங்குகின்றாய்
அப்பாவி மக்களின் அழுகைக்குரல் போதாதா
எரிகின்ற கண்களை ஏன் நீ அணைக்கவில்லை.
கண்திறந்து மக்கள் கண்ணீர் துடைக்கின்ற
நன்நாளைக் காண்கின்ற நாள் வருமோ எங்களுக்கு

வில்லூன்றி தன்னகத்தே வீற்றிருக்கும் வேலவனே
கண்தூங்கி விட்டாயா(அல்ல) கடல் மூழ்கி விட்டாயா
வெற்றி வேலேந்தி விண்ணை வலம் வந்த கதை
பெற்றோர் எனக்கென்று பெருமையுடன் கூறியதை
உண்மையென்று நம்பியதை என் உள்ளம் மறக்கவில்லை.
தாய்க்குலத்தின் தலைவிதியை தலை கீழாய் மாற்றுகின்ற
வீணர்களின் வெறியாட்டம் வெற்றிநடை போடுகையில்
இருமருங்கும் இரு பெண்கள் இதமான இல்வாழ்க்கை
ஆலயந்தன்னுள் நீர் அமர்ந்திருக்கும் தோற்றமிது.
அப்பாவி விதவையரின் அழுகையது ஓய்வுபெற
வீரவேல் தனையேந்தி வீணர்களின் கூட்டத்தை
வேரோடு அழிக்கின்ற நாள் வருமோ நம்மவர்க்கு
வினை தீர்க்கும் வேலவனே என் வேண்டுகோள் நிறைவேற
நித்தம் உன் நாமத்தை நினைக்கின்றேன் இங்கிருந்து

அன்புத்தம்பி குமாரதுரை
டென்மார்க்

# புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு......

ஒரு சிங்களவரையோ ஒரு இஸ்லாமியரையோ அவர்கள் பார்த்ததில்லை. அவர்களுக்கு எதுவிதமான பொழுதுபோக்குமில்லை. அவர்களுடைய உரிமைகளை மறுத்து எதற்காக அவர்களை அடிமைகளாகப் பாவிக்கின்றீர்கள். அவர்களுடைய பிரயாணம் திருமணம் கல்வி வாழ்க்கை முறை போன்ற விடயங்களில் எதற்காகக் கட்டுப்பாடு விதிக்கின்றீர்கள்

நீர் ஒரு கூட்டம் பினாமி பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்திருக்கின்றீர்கள் அவர்களின் ஒரே கடமை உங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதும் உங்களுக்காகப் பேசுவதும் மட்டுமே இலங்கை இந்தியாவிலும் மட்டுமல்ல உலகின் பெரும் பகுதியான நாடுகளில் உள்ள தமிழ் இலத்திரனியல் அச்சு ஊடகங்கள் உங்களையும் உங்களது சகாக்களையும் பெருமைப்படுத்துவதிலேயே ஈடுபட்டுள்ளார்கள். உங்களுக்கு விரோதமாக ஒரு வார்த்தை எழுதவோ பேசவோ துணிவின்றி வாழ்கின்றார்கள். அவர்கள் பெருமளவில் உண்மையை எழுதாது மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களை கீழ்த்தரமாக விமர்சிப்பதிலேயே ஈடுபட்டுள்ளனர். உம்மை கிண்டல் செய்வதோ அம்பலப்படுத்துவதோ எனது நோக்கமல்ல நீர் உமது வழிமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றே கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழீழம் கிடைக்காதென்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சர்வதேச சமூகமோ அல்லது இந்தியாவோ அதை என்றம் அனுமதிக்கப்போவதில்லை.

06ம் பக்கத் தொடர்ச்சி

அவர்களுடைய ஒத்தாசை இன்றி அது அடையக் கூடியதும் அல்ல. ஆகவே அதை மறந்துவிடுங்கள். தமிழீழம் அடையக் கூடியது என்று மக்களை நம்ப வைக்க உம்மால் முடியாது. உமது முகவர்களாக செயற்படுபவர்களும் உமது கொள்கைகளை பரபபுபவர்களாக செயற்படுகின்றவர்களும் உண்மையானவர்களல்ல. சொந்த நலனுக்காக வியாபாரமாக செய்கின்றார்கள். தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி வசதியை செய்து கொடுத்து தாமும் ஆடம்பரமாக வாழுகின்றார்கள். உங்களை ஆதரிக்கின்ற தமிழ் நாடு அரசியல் வாதிகளும் அவ்வண்ணமே. உம்மை ஆதரிக்கின்ற பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் உமது கொள்கையில் நம்பிக்கை வைத்தல்ல உமதுமூலமாக தமிழர்களின் வாக்குகளை பெறவேண்டும் என்ற சுயநல நோக்கில் மட்டுமே அரச சேவையிலும் தனியார் துறையிலும் வேலைவாய்ப்புக்கள் மிகவும் குறைந்து வருகின்றன. 50 வருட அகிம்சை போராட்டமும் 25 வருட ஆயுதப்போராட்டமும் எம்மை இருந்த இடத்திற்கே கொண்டு வந்து விட்டுள்ளது. தமிழ் இசுலாமிய மக்களின் பொருளாதாரம் சீரழிந்துவிட்டது போக்குவரத்து வசதியின்மையும், ஏ 9 பாதையில் விதிக்கப்படும் கடும் வரியும் விவசாயத்திற்கும், மீன்பிடிக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. மின்சார விநியோகம் தடைப்பட்டதாலும் தொழிற்சாலைகள் கைத்தொழிற்பேட்டையும் அழக்கப்பட்டமையாலும் கைத்தொழில் முழுவதுமாக அழிக்கப்படடு மக்கள் அரசின் உதவியிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அரச சேவைக்கு சேர்க்கப் படுபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதால் இளைப்பாறிய ஊழியர்களுடன் அரச சேவை நடைபெறுகின்றது. இராணுவம், கடற்படை, ஆகாயப்படை மற்றும் பொலிஸ் ஆகிய துறைகளில் தமிழர்கள் வேலை வாய்ப்பு பெறுவதை வெற்றிகரமாக தடுத்து விட்டீர்கள் இந்நிலையில் மக்கள் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றீர்கள்.

தமிழீழம் பகல் கனவு என்று தெரிந்தும் ஏன் தொடர்ந்து பலரின் உயிரை பலிகொடுக்கின்றீர்கள், பல விதவைகளையும் அனாதைகளையும் உருவாக்குகின்றீர்கள். சிங்களவர்களோ தமிழர்களோ அல்லது வேறு எந்த இனத்தவர்களோ அவர்களது சொத்துக்களையும் அரச சொத்துக்களையும் அழிக்கின்றீர்கள். நான் கூறியவை எல்லாவற்றையும் கவனத்திலெடுத்து ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டி முறையிலான ஒரு தீர்வை ஏற்கக் கூடிய வகையில் தனிநாட்டுக கோரிக்கையை கைவிடுவதாக அறிவியுங்கள் அவ்வாறு செய்வீர்களேயானால் பெருந்தொகையான சிங்கள மக்களும் ஏனையோரும் முழு ஆதரவு வழங்குவர்.

இந்தியாவும் அதற்கு ஆதரவு கொடுக்கும் வேளையில் சர்வதேச சமூகம் அதற்கு ஆதரவாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும். சிங்கள மக்களுடைய சிந்தனையை நான் அறிவேன். அத்தகைய ஒரு தீர்வுக்கு நீங்கள் உடன்படும் பட்சத்தில் இதுவரை சமஸ்டியை எதிர்த்தவர்கள் கூட நிச்சயமாக தமது நிலைப்பாட்டை மறு பரிசீலனை செய்வார்கள்

உமது நடவடிக்கைகளால் பொதுமக்களுக்கும் அரசுக்கும் ஏற்பட்ட சொத்தழிவுகளை அமைதியாக தனிமையில் ஓர் இடத்தில் இருந்து கணக்கிட்டுப் பாருங்கள் அத்தகைய அழிவினுடைய பெறுமதி உங்களுக்கு அதிர்ச்சியைக்கொடுக்கும். நாட்டுக்குத் தேவையான உட்கட்டமைப்பு, பெருந்தெருக்கள் மற்றும் வீதிகள் பாடசாலைகள் தொழிற்சாலைகள் இன்னும் பல வசதிகளோடு வேலையற்ற அனைவருக்கும் தொழில் வாய்ப்பு முதலியவற்றுக்கு போதுமானதாயிருக்கும். பல்வேறு நாடுகளினுடைய உதவிகள் வந்து குவியும் புதிதாக அமையும் சொர்க்க பூமியில் நாமெல்லோரும் மனநிறைவேடும் ஒருவரை ஒருவர் மதித்தும் அன்பு செலுத்தியும் வாழமுடியும்.

மேலும் நாட்டு நிர்வாகத்தில் ஒரு கணிசமான பங்களிப்பு பெறுவதன் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் உமது கனவை நிறைவேற்ற முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக பல்வேறு நாடுகளிலும் சிதறிக்கிடக்கும் எமது உறவினர்கள் தாம் சேர்த்து வைத்திருக்கின்ற சொத்துக்களோடு நாட்டுக்கு திரும்பி நாட்டை கட்டியெழுப்பவும் உதவுவர்.

இந்த கடித்த்தை உமக்கு எழுதுவதன் நோக்கம் தமிழ் மக்கள் இதுவரை காலம் அனுபவித்து வந்த கஸ்டங்கள் துயரங்கள் பற்றியும் இழந்த சொத்துக்கள் பற்றியும், சிங்கள மக்களுக்கு தெரியவைத்து அவர்களது கண்களை திறக்க வைப்பதற்காகும்."

# மனிதப்பண்புகள் .........

**எமது மக்களுக்காக பேசுவதற்கு நாங்கள் எமது பெருமைகளை இழந்து விட்டோம். மனிதப்பண்புகள் மறக்கடிக்கப்பட்டு விட்டன. ஏன்?. சிங்கள பொலிஸ் அதிகாரி ஒருவரை சமாதானம் பேசவந்ததற்காக அவரை கொன்று குவித்தார்கள். இணுவிலில் நடந்த இச் சம்பவத்திற்காக அங்குள்ள பலர் என்னிடம் வருத்தப்பட்டார்கள். எமது கலாச்சாரம், கல்வி எல்லாம் போய் விட்டது. பல கல்விமான்கள் இல்லாது போய் விட்டார்கள். இந்தப் போராட்டம் ஆரம்பமானது தரப்படுத்தலை எதிர்த்து தான். ஆனால் இன்று எமது கல்வி அந்தப் போராட்டத்தினாலேயே சீரழிந்து போய் விட்டது. 27நாட்கள் பாடசாலை நடக்க விடாது புலிகள் தடுத்திருந்தார்கள்.**

எவ்வாறு இப்பிரச்சினையைத் தீர்க்கலாம். நாங்கள் மூன்று பேரும் ஒன்று சேர்ந்திருக்கிறோம். எமக்கு வேண்டும் எமது மக்களுக்கான நிம்மதி. எதிர்காலத்தில் வேறு பலரையும் இணைத்துக் கொள்வோம். தீர்வு திட்டத்தை முன்வையுங்கள் எனக்கேட்டிருந்தோம். இந்தியாவில் நாங்கள் மூவரும் பத்திரிகையாளர் மகாநாட்டை கூட்டியிருந்தோம். ஜனாதிபதியிடம் இந்திய முறையிலான தீர்வு திட்டத்தை முன்வையுங்கள் என பகிரங்கமாக கேட்டிருந்தேன். இதை தென்னிலங்கை கட்சித் தலைவர்களுடனும் சர்வதேச பிரதிநிதிகளுடனும் உரையாடும்போது குறிப்பிட்டிருந்தேன். இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான உங்களுடைய சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க தயாராக இருக்கிறேன் என அவர் தனது உரையின் போது குறிப் பிட்டிருந்தார்.



**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் திரு. சித்தார்த்தன்**

மேற்படித் தலைப்பில் உரையாற்றி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின தலைவர் திரு. சித்தார்த்தன் அவர்கள தனது உரையில் மக்களுக்கு தீர்வு எட்டப்படுவதில் அக்கறை கொண்டவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள்.இது மிகவும் ஆரோக்கியமான விடயம் என்றார். இலங்கையில் தற்போது என்ன நடைபெறுகிறது என்றால் அங்கு கொலைகள்தான் நடைபெறுகிறது. அரசியல் தொடர்பாக சர்வகட்சி மகாநாடுகள் மற்றும் தீர்வுதிட்ட யோசனைகள், சர்வதேச அழுத்தங்கள போன்றவை சமாதான தீர்வை கொண்டு வருவதில் முனைகின்றன. எந்த அரசும் தனியாக தீர்வை கொண்டுவர முடியாது. எதிர்கட்சியின் ஒத்துழைப்பு இன்றி தீர்வையெட்ட முடியாது.

பாராளுமன்றத்தில் இரண்டில் மூன்று ஆதரவின்றி பாராளுமன்றத்தில எந்தவொரு பிரேரணையையும் நிறைவேற்ற முடியாது. பல தடவைகளில் நான் கூறியிருக்கிறேன். பிரபாகரன் எந்த சமயத்திலும் தமிழீழத்தை கைவிடமாட்டார். அதில் அவர் உறுதியாக இருக்கிறார். 20ஆயிரம் இயக்க உறுப்பினர் கொல்லப்பட்டுள்ளார்கள். 10ஆயிரத்திற்கும் அதிகமான மாற்று கருத்துடையவர்கள், அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தமிழீழத்தை கைவிட்டு புலிகள் ஒரு தீர்வை ஏற்கமாட்டார்கள் என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

சர்வதேச அழுத்தத்தினாலும் அரசினாலும் முன்வைக்கப்படுகின்ற தீர்வை புலிகள் ஏற்பார்களா? என்கிற கேள்வியும் எழுகிறது. சர்வதேச சமூகம் மீண்டும் பேச்சுவார்த்தை தொடர்பாக இருதரப்பினரையும் வலியுறுத்தியுள்ளன. நோர்வே கூட சமாதான முயற்சிகளில் மண்டும் இறங்கியுள்ளது. நோர்வே கூட ஒரு பக்க சார்பாகவே கடந்த காலங்களில் செயற்பட்டு வந்துள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

எமது தோழர்கள் புலிகளால் கொலலப்பட்டபோதும் ஒரு பக்க சார்பாகவே இயங்கியிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. அவர்கள் நியாயமான முறையில் செயற்பட்டால் ஒரு தீர்வை எட்டக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகும். எமது பிரச்சினையில். இந்தியாவின் ஒததுழைப்பின்றி தீர்வை எட்ட முடியாது. மாவட்ட சபை தீர்வை அரசு தற்போது முன் வைத்திருக்கிறது. வடகிழக்கு

06ம் பக்கத் தொடர்ச்சி

தவிர்ந்த ஏனைய இடங்களில் மாகாணசபை இயங்கி கொண்டிருக்கிறது.

தீர்வு திட்டம் இரு கட்சிகள் உடன்பட்டு செய்யப்பட வேண்டியது. தீர்வை எட்டாத வகையில் புலிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்கள் சேர்க்கப்பட்டாலும் சிறு நிலத்தையாவது புலிகளால் மீட்க முடியவில்லை. கிழக்கு மாகாணம் புலிகளிடமிருந்து பறிபோய விட்டது. மூதூர் போன்ற பிரதேசங்களில் பல பகுதிகள் பாதுகாப்பு வலயமாக பிரகடகனப்படுத்தப்பட்டு இன்று மக்கள் குடியேற முடியாத நிலமை உள்ளது.

83ல் பார்ததசாரதி அவர்கள் குறிப பிட்டிருந்தார். தனிநாடு சாத்தியமில்லை என குறிப்பிட்டிருந்தார். ஆயுதப்போராட்டத்தை முன்னெடுப் பதால் மக்கள் அழிவை சந்திப்பதை தவிர தீர்வையெட்ட முடியாது. பிரபாகரனுக்கும் மகிந்தாவிற்கும் ரணிலுக்கும் உள்ள கௌரவப் பிரச்சினையாக தற்போதுள்ள நிலமைகளை பார்க்கக்கூடியதாக உள்ளது.

80களில் யாழ்ப்பாணத்தில் குடிசனத் தொகை 10லட்சம் மக்கள். 27 வருடங்களுக்குப் பிறகு 4லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இந்த நிலைமை தொடருமானால் மிகக்குறைவான ஒரு சமூகம் கல்வி, பொருளாதாரம் என அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் வாழ்கின்ற சூழ்நிலை உருவாகும்.

கௌரவமான தீர்வு ஒன்று எட்டப்படுவதில் நீங்கள் முயற்சி செய்யவேண்டும். பல வழிகளிலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும் புலிகளுக்கு ஒரு நெருக்குவாரத்தை கொடுக்க வேணடும். உங்களுக்கு அந்த அக்கறை இருக்கிறது. போராட்டம் நீடிக்குமாயின் தமிழ்ச் சமூகம் இயற்கை மரணத்தை எட்டும். போராட்டமென்றால் அழிவு இருக்கும் அழிவுதான் போராட்டமல்ல. அங்கு வாழ்கின்ற மக்கள் போதுமென்ற நிலமைக்கு வந்து விட்டார்கள். தமிழர்களை பொறுத்தமட்டில் முன்பு சிறப்பாக வாழ்ந்தார்கள். கையேந்தி வாழ்ந்திராத அவர்கள் இன்று அகதிகளாக அல்லல்பட்டு வாழ்கின்றனர்.

கிழக்கில் அதிகமான இழப்பை சந்தித்து வாழ்கிறார்கள். அவர்களது அகதி வாழ்க்கை முடிவுக்கு வரவில்லை. வடக்கில் உள்ள மக்களுக்கு வெளிநாட்டில் ஒருவர் உதவியாக இருக்கின்றனர். ஆனால் கிழக்கில் அத்தகைய நிலமை இல்லை. வாகரையை ராணுவம் கைப்பற்றிய போது அங்கு புலிகளின் பங்கர்கள் அரிசி மூட்டைகளாலும் பருப்பு மூட்டைகளாலும் நிரப்பப்பட்டிருந்தது. மக்களை அரசு பட்டினி போடுகிறது என்கிற குற்றச் சாட்டு புலிகளின் ஊடகங்களால் முன் வைக்கப்பட்ட காலத்தில் தான் இந்த நிலமைகளை நாங்கள் கண்கூடாகப் பார்த்தோம். நாங்கள் சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் மத்தியில் தீர்வு திட்டம் தொடர்பாக சில விடயங்களை எடுத்துக்கூறி வருகிறோம்.

தமிழ்மக்கள் என்ன கேட்கிறார்கள் என்பது தெரியாது என சொல்லக் கூடாது என்கிற வகையில் நாம் சில விடயங்களை குறிப்பிட்டு வருகிறோம். நீண்டகாலத்திற்கு இந்த யுத்தத்தினை நீடிக்கவிடாமல் தீர்வுக்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

**ஈ.பி.ஆர்.எல்.எப்~ பத்மநாபா அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் சிறிதான்**

அவர்கள் உரையாற்றும் போது, இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்தமைக்கு இலங்கையர் ஜனநாயக முன்னணிக்கு எமது நன்றிகள். இது போன்று பகிரங்கமாக மக்கள் மத்தியில் பேசி பல வருடங்களாகி விட்டன. ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பு சமூகமாற்றம், தீண்டாமைக்கு எதிராகவும் பெண்களின் உரிமைகள் குறித்தும் பிரதேச பாரபட்சம் குறித்தும் அக்கறை கொண்டவர்களாக உள்ளோம். தற்போது நாங்கள் ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் சித்தார்த்தன் அவர்களுடன் கூட்டாக ஒரு இணைவை ஏற்படுத்தியிருக்கிறோம். இது தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்காக அவர்களுக்கு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் நாம் இணைந்து செயற்பட முன்வந்துள்ளோம்.

பலவருடங்களுக்கு முன் இதுபோன்ற பல சந்திப்புக்களை மக்கள் மத்தியில் நடாத்தி யிருந்தோம். 1979 இன் பிற்பகுதியில் ஈழமாணவர் பொது மன்றம். மாணவரகள் மத்தியில் தேசிய விடுதலையுடன் சோசலிஷ புரட்சிக் கனவுகளுடன் வேலை செய்து வந்தோம். 1978ல் இன்பம், செல்வம் போன்றவர்கள் கொலை செய்யப்பட்ட காலத்தில் புன்னாலை கட்டுவனில் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த ஒருவரை கொன்று அவரின் வாயில் இரத்தத்தை பருக்கியதை நாம் எதிர்த்து குரல் கொடுததிருக்கின்றோம் வடக்கில கிழக்கில் நாம் இவ்வாறு சிறு சிறு போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறோம்.

நாம் ஈழம் என்று வலியுறுத்தி மலையக மக்களையும் சேர்த்திருந்தோம். சிஙகளவனுக்கு மூத்திரம் பெய்ய ஒரு இடத்தையாவது கொடுங்கள் என்ற குரல்கள் எழும்பியபோதும் நாஙகள் உழைக்கும் மக்களாகிய மலையக மக்களின் விடிவிற்காக அவர்கள் வாழும் பிரதேசத்தையும் எமது போராட்டத்துடன் இணைத்திருந் தோம்.

எப்போது உடல் ரீதியாக அழிக்கின்ற போக்கு எமது சமூகத்தில் தோன்றியதோ அன்றே இது மக்கள் போராட்டத்தின் மீது இருந்த நம்பிக்கையை அழித்தது. 86களில் இது இன்னும் அதிகமாகியது. எங்களுக்கு என்ன சொல்ல வேண்டும் எனத் தெரிய வேண்டும். கருத்து மூலம் பௌதிகமான வன்முறை மூலம் ஆக்கிர மிக்கிற போக்கு காணப்படுகிறது. இந்த ஆதிக்கம் செலுத்துகிற போக்கு எங்களுக்கு என்ன வேண்டும் என சொல்ல விடுவதில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க எங்களது பக்கத்தில் இருந்து சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. பண்டா செல்வா ஒப்பந்தத்தை இதில்



முக்கியமாக குறிப்பிடலாம் ஆனால் அவை பேரினவாதத்தால் கிழித்தெறியப்பட்டது. தனிச் சிங்கள சட்டத்தின் குழந்தைகளாக ஜே.வி.பியும் தமிழ் இயக்கங்களும் உருவாகின.

பிரச்சினை கூர்மையடைந்து யுத்தமாகியது. சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல எனக் கூறினாலும் சில சம்பவங்கள் அம் மக்களுக்கு எதிராகவே நடைபெற்றுள்ளன. இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஏற்பட்ட மாகாண சபைத தீர்வு எட்டப்பட்டாலும் நாங்கள் துரோகிகளாக புலிகளால் சித்தரிக்கப்பட்டோம். திருகோணமலையில் தலைமையாக வைத்து மாகாணசபையை செயற்படுத்தினோம். தீர்வு திட்டம் தொடர்பாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண முன்வைத்த தீவு யோசனைகளை கருத்திலெடுத்து அதில் உள்ளடக்கப்படாத சில விடயங்களை உள்ளடக்கி நாங்கள் முன்வைத்தோம்.

புலிகள் தமிழ் மக்களிடையே இருந்த பல விடயங்களை அழித்தொழித்து விட்டது. புலி இருக்க வேண்டும் என பேரினவாதம் விரும்புகிறது. புலிகளை வைத்து சர்வதேச ரீதியாக பிரச்சாரம் செய்கிறது. 16லட்சம் மக்கள் தான் வடக்கு கிழக்கில் உள்ளனர். இன்னும் சிலநாட்களில் இதன் தொகை குறைந்து விடும். சுனாமியால், சூறாவளியால் அழிந்து இந்த மக்களை இந்த போராட்டம் பிச்சை யெடுக்கிற நிலமை கொண்டு வந்து விட்டது. மக்கள் மீளக் குடியேற்றப்பட்டாலும் நெருக்கடிகள் இருக்கின்றன. இந்த சமூகத்தில் ஒரு நோயாக புலிகள் உள்ளனர்.

அது சமூகத்தை நடுத்தெருவிற்கு கொண்டு வந்து விட்டது. அது 20,000 விதைக்கப்பட்டினம் என்று சொன்னால் 50வீதம் சிறுவர்களாகவே உள்ளனர். இந்த சமூகத் திற்குள் அது அழிவை மாத்திரம்தான் பிரகடனப்படுத்தியிருக்கிறது. தமிழ் ஊடகங்கள் இந்த அழிவை வழிபடுகின்றன. புலம் பெயர்ந்த மக்களைப் பொறுத்த வரை புலிகள் விமானம விடுவது ஒரு போதையாக உள்ளது. வன்னியில் கொல்லப்பட்ட சிறுவர்கள் உடல்கள் வண்ணப் படங்களில் இங்கு காட்டப்படுகிறன. குரூரம் விற்கப்படுகிறது.

கிழக்கில் வாழ்கின்ற மக்களிடையே புலிகளின் விமானத்தை பற்றி என்ன அக்கறை இருக்கிறது. டெலோ இயக்கத்தினரை கொன்ற கொடூரத்தை மறக்க முடியுமா? தோழர் பத்மநாபாவின் அஞ்சலிக் கூட்டத்தில் தோழர் ஜெயகாந்தன். ஒரு முறை பேசும்போது குறிப்பிட்டார். புலிகள் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இந்தியாவிற்கும் ஏன் தமக்கும் நண்பர்கள் இல்லை எனக்குறிப்பிட்டார்.

எமது சமூகத்தினுள் கொலை விருட்சத்தை வளர்த்து விட்டது யார்? தமிழ்ப் பாசிசத்தின் கூறுகள் எமது சமூகத்தினுள் இல்லாமல் இருக்கிறதா?. எமது சமூகத்தினுள் இருக்கக்கூடிய கூறுகளின் வெளிப்பாடுகள்தான் இவை இணைந்த வடக்கு கிழக்கில் தான் ஒரு தீர்வு என்பதை ஏற்றுக் கொள்கிறோம். 19 வருடங்களுக்கு முன் சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருக்கின்ற கட்டமைப்பை ஏற்று கொண்டு வந்துள்ளோம். தமிழ் மக்களின் பிரச்சினை 60 வருடங்களுக்கு மேலாக உள்ள பிரச்சினை. நாங்கள் பிரிவினைப் பற்றி கதைக்கவில்லை குறைக்கப்பட்ட அதிகாரப்பகிர்வை பற்றித்தான் கதைக்கின்றோம். இருபகுதி மக்களும் சேர்ந்து வாழவேண்டிய ஒரு அதிகாரப்பகிர்வுக்கு நாங்கள் வர வேண்டும்.

வடக்கு கிழகக்கில் இருந்த எல்லாம் பறித்தெடுக்கப்பட்டு விட்டது. தமிழ்மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யாமல் ஒரு தீர்வை எட்ட முடியாது. சிங்கள மக்கள் இதற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கப்பட வேண்டும். பாசிச சக்தி என்பது வன்முறையை கைவிட்டு வரும் என எதிர்பார்க்க முடியாது. புலிக்கு மாற்றாக ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். சிறிய ஊருக்குள் இருக்கு மட்டும். இந்த பிரச்சினை. பூதாகரமாகத் தெரியும் இலங்கை முதல் ஆப்கானிஸ்தான் வரை எமது பார்வைகள் விரிய வேண்டும். ஜே.வி.பி நல்ல ஆட்கள். சுனாமியில் உதவி செய்தவை. பிரச்சினை யென்னவென்றால் அதிகாரப்பகிர்வுக்கு உட்பட்டால் புலக்குச் சாதகமாக போகும் என கருதுகினம் கதைச்சுப் பேசி இயலுமான வரை முயற்சி செய்யவேண்டும் உருப்படியாக மக்கள் ஏற்றுக்கொள்ள வேணடிய தீர்வு முன் வைக்கப்படவேண்டும்.

ஜனநாயக இடைவெளி ஒன்று தற்போது தேவை. 20வருடகாலத்தினுள் எந்த வகையான ஒரு முற்போக்கு அரசியலை செய்திருக்கிறோம். முன்பு அரசியல் நாகரீகம் இருந்தது. தற்போது அது இல்லை. ஜேர்ணலிசத்தில் நாகரீகம் இருக்க வேண்டும். சமூகத்தினுள ஒரு நேர்த்தியான ஒரு வரைமுறைகள் உருவாக்கப்படவேண்டும். சமூகம் நலமடிக்கப்பட்டு விட்டது. அதன் வீரியம் இழக்கப்பட்டு விட்டது. இவ்வளவு காலம் பட்ட துயரங்களுக்கு நல்லதொரு தீர்வு எட்டப்பட வேண்டும். இங்கு உள்ள புலம்பெயர் மக்கள் எதற்காக பணத்தை புலிகளுக்கு வழங்குகிறார்கள் என்றால் அது மக்கள சாவதற்காக அனுப்படுகிறது. புலிகளின் ஐரோப்பிய வன்முறைகள் குறித்த ஒரு கருத்தின் போது ஐரோப்பிய மக்கள் நாகரீகமானவர்கள். பண்பானவர்கள் ஆகவே அங்கு நாங்கள் அதை செய்யமாடடோம் என தமிழ்ச் செல்வன சொல்கிறார். இப்படி பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது. எமது மக்களுக்கு என்ன் மரியாதை இருக்கிறது.


கொல்லப்பட்ட மக்கள் இன்றிருந்தால் அது ஒரு பெரிய சமூகப் பலம். மலையக மக்கள் சார்பாக சந்திரசேகரும் தேவராஜும் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் கரிசனைக்கு ஏற்கப்பட வேண்டும். நாங்கள் இன்று ஐக்கிய முன்னணி அமைத்திருக்கிறோம் அதில் ஒரு வரலாற்றுப் பாத்திரத்தை ஆனந்தசங்கரி அவர்கள் ஏற்றிருக்கிறார். அஞ்சாமல் குரல் கொடுக்கின்ற ஒருவர் தலைமை ஏற்றிருக்கிறார். ஒரு பரந்த ஐக்கியம் தேவை. தனித்துவங்கள் கருத்துகள் அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். எங்களது சமூகத்தை ஒரு மறுமலர்ச்சிக்கு கொண்டு வரப்பட வேண்டும். நாங்கள் எமது சமூகம் சுபீட்சமாக வாழ்வதற்கான கனவை நாங்கள் காணவேண்டும். எமது சமூகம் செம்மை படுத்தப்பட வேண்டும்.

85ற்குப்பிறகு மக்களிடையே போய வேலை செய்யக்கூடிய சுதந்திரம் இல்லாது போய்விட்டது. பரந்த அளவில் நாங்கள் ஐக்கியப்பட்டு வேலை செய்யவேண்டும். என தோழர் சுகு அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

# மனிதப்பண்புகள் மறக்கடிக்கப்பட்டுவிட்டன

## புலம் பெயர் ஜனநாயக சக்திகளுடனான சந்திப்பில் தலைவர் ஆனந்தசங்கரி

**முதலில் அனைவருக்கும் எனது வணக்கங்கள் இன்றைய சமுதாயம் நாங்கள் கூறுவதை கேட்கவிருப்பதை காண்கிறபோது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் 50 ஆண்டுகள் அரசியலில் ஈடுபட்டவன். 17வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்டு வந்திருக்கிறேன்.**



புலிகளால் கடந்த தேர்தலில் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டேன். 2004இல் நடைபெற்ற தேர்தலில் எவ்வாறு புலிகள் நடந்து கொண்டார்கள் என்பதை அறிவார்கள். மக்களை சுதந்திரமாக வாக்களிக்கவிடவில்லை, எம்மை சுதந்திரமாகப் பிரச்சாரம் செய்ய விடவில்லை. வாக்குகள் மோசடி செயயப்பட்டு தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகளின் உதவியால் வெற்றி பெற்றார்கள். பல்வேறு நாடுகளில் இரு ந்து குறிப்பாக ஐரோப்பிய யூனியன் இததேர்தல் செல்லுபடியற்றது என்றார்கள். விடுதலைப் புலிகளின் சின்னம் தேர்தல் பெட்டியில் ஒட்டப்படிருந்த கொடுமையும் அப்போதுதான் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளுக்கு என்ன அருகதை இருக்கிறது.

எமது மக்களுக்காக பேசுவதற்கு. நாங்கள் எமது பெருமைகளை இழந்து விட்டோம். மனிதப்பண்புகள் மறக்கடிக்கப்பட்டு விட்டன. ஏன்?. சிங்கள பொலிஸ் அதிகாரி ஒருவரை சமாதானம் பேசவந்ததற்காக அவரை கொன்று குவித்தார்கள். இணுவிலில் நடந்த இச் சம்பவத்திற்காக அங்குள்ள பலர் என்னிடம் வருததப்பட்டார்கள். எமது கலாச்சாரம், கல்வி எல்லாம் போய் விட்டது. பல கல்விமான்கள் இல்லாது போய் விட்டார்கள். இந்தப் போராட்டம் ஆரம்பமானது தரப்படுத்தலை எதிரத்து தான்.

ஆனால் இன்று எமது கல்வி அந்தப் போராட்டத்தினாலேயே சீரழிந்து போய விட்டது. 27நாட்கள் பாடசாலை நடக்க விடாது புலிகள் தடுத்திருந்தார்கள். புலிகளின் போராட்டத்திற்காக இப் பாடசாலைகள் மூடப்பட்டன. தமிழ்ச் சமூகத்தன் கல்வி சீர்குலைக்கப்பட்டது. கண்டி ஏ-9 வீதி 10 வருடங்களுக்கு முன் மூடப்பட்டிருந்தது. விவசாயத்தை மீன் பிடியை குலைத்ததுயார்? கிளிநொச்சியில் உள்ள சந்தையில் யாழ்ப்பாணத்தில இருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற அத்தனை பொருட்களும் அங்கு வரும். பலரும் அங்கு சந்தையில் வியாபாரம் செய்தார்கள். பல்வேறு பிரதேசங்களில் கொண்டு வந்த உற்பத்திப் பொருட்கள் இச்சந்தையில் விற்பனை செய்யப்பட்டன. இன்று அவர்களின் நிலை என்ன?.

சிமெந்து தொழிற்சாலையில் 1500 பேர்வரை வேலை செய்தார்கள் இன்று அந்த தொழிற்சாலையின் நிலமை என்ன?. பரந்தன் தொழிற்சாலையின் இன்றைய நிலை என்ன?. இன்று அரசின் பிச்சை சம்பளத்தில் வாழவேண்டிய நிலையில் மக்கள் உள்ளார்கள். தமிழீழம் என்பது முடிந்த கதை?. தமிழீழம் நாங்கள் கேட்டோம். தீர்மானம் எடுத்தோம்.

இந்தியா தமிழீழத்தை ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை. இந்தியாவில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் தமிழீழத்தை அவர்கள் அங்கீகரிக்கப் போவதில்லை. எமது நாட்டில் எமது மக்களுக்கு திருப்தியான வாழ்க்கை இல்லை. நிம்மதியான வாழ்க்கை இல்லாததால் அவர்களுக்கு தேசியக் கொடி மீதோ தேசிய கீதமோ நம்பிக்கை இல்லை. மதன்ஜிங் விருதை இலங்கை அரசினால்தான் எனக்கு வழங்கப்பட காரணமாக இருந்தது என ஒரு இணையத் தளம் ஒன்றில் எழுதியிருககிறார்கள். எதை எழுதுவது என்று தெரியாமல் எழுதுகிறார்கள் இனப்பிரசசினையின் தீர்வு குறித்து மகாநாயக்கா தேரோவை சந்தித்தது தொடர்பாக பலருக்கு நக்கல். மகாநாயக்க தேரோவை எதற்காக சந்தித்தேன? தேசிய இனப்பிரச்சினை தீர்வு குறித்த எமது ஆலோசனைகளை நான் அவரிடம் கூறினேன். அண்மையில் அவர் ஆனந்தசங்கரி எதைக் கேட்டாலும் கொடுங்கள் என்று அவர் கூறியிருக்கிறார். அதன் அர்த்தத்தை புரியவேண்டும்.

வடக்கிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றி கடந்த 15வருடங்களுக்கு மேலாக அவர்களை பிரித்து வைத்திருக்கிறார்கள். சிங்களவர்கள் எல்லோரும் பேரினவாதிகள் அல்லர். [illegible] பிரச்சினைகளை புரிந்து கொள்ளக் கூடியவர்கள் அங்கு இருக்கிறார்கள். தமிழ் சிங்கள முஸ்லீம் மாணவர்களுக்கு நான் ஒரு காலத்தில் கல்வி போதித்திருக்கிறேன். சிஙகள மக்கள் வகுப்பு வாதிகள் அல்லர் வகுப்புவாதிகளாக சித்தரிக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்று சிங்கள மக்கள் இனப்பிரச்சினையைத் தீரக்கப்பட வேண்டும் என்பதில் தயாராகி விட்டார்கள்.

தொடர்ச்சி 05ம் பக்கம்

## யோகசங்கரி


ஈழமாணவர் பொதுமன்றத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவா். ஈழமாணவர் பொதுமன்றத்தினூடாகவே ஈழமக்கள் புரட்சிகரவிடுதலைமுன்னணியின் தலைவர்கள் பலா் உருவாகினார்கள். லண்டனில் அவர் தேசிய ஒடுக்குமுறைகெதிரான விழிப்புணாச்சியூட்டும் நடவடிக்கைளில் பங்கு பற்றும் அதே வேளை சர்வதேச முற்போக்காளர்களுடன் உறவைப்பேணியவர்.

ஈழமாணவர் பொதுமன்றத்தின் செயறபாடுகளில் பலரையும் ஈடுபாடு செலுத்த வைப்பதில் யோகசங்கிரி அவர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

அரசியல் சமூகப்பாரம்பரியத்தை கொண்ட குடும்ப பின்புலம் அவருக்கிருந்தது.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பின்னான காலப்பகுதியில் தனது தொழிலையும் துறந்து விட்டு இலங்கைக்கு வந்து பணியாற்றியவா். 1980களின் பிற்பகுதியில் அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

பாராளுமன்றத்தில் அதிகாரப்பகிர்ந்தளிப்பு தொடர்பல் பல பெறுமதி வாய்ந்த உரைகளை ஆற்றியிருக்கிறாா்.



உயர்ந்த ஆளுமை மிக்க ஆகிருதியும் இன்முகமும் கொண்ட இந்த மனிதரின் குரூரமான படுகொலை எத்தகைய பிணி எமது சமூகத்தை பிடித்தாட்டுகிறது எனபதை குறிப்புணர்த்தி நிற்கிறது. தோழர் பத்மநாபா உட்பட அவரின் 12 தோழர்கள் சென்னை மண்ணில் படுகொலை செயயப்பட்டபோது திரு யோகசங்கரி அவர்களும் கொல்லப்பட்டார்.

# புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு த.வி.கூ தலைவர் வீ. ஆனந்தசங்கரி அவர்கள் எழுதிய கடிதத்திலிருந்து....

கடந்த மூன்று நான்கு ஆண்டு காலமாக எனது கடிதங்களுக்கு நீர் பதில் அனுப்பாதமை துரதிஸ்டமே. இக்கடிதத்திற்கும் உமது பதிலை நான் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் கசப்பானாலும் இக்கடிதத்தை கவனம் செலுத்திப் படிப்பீர என எதிர்பார்க்கின்றேன். இந்த நாட்டு மக்களிலும் குறிப்பாக தமிழ் பேசும் மக்களிலும் மிக அக்கறை கொண்டுள்ளேன். நிலமை கட்டுக்கு மீறி செல்வதால் மேற்கொண்டு தாமதிக்காமல் மிகவும் துன்பப்படும் நாட்டு மக்களுக்கு அமைதியையும் சமாதானத்தையும் கொண்டுவர வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இங்கே குறிப்பிடும் சில விடயங்கள் என்னால் முன்பு எழுதப்பட்ட கடிதங்களில் குறிப்பீடப்படாதவையாகும். இன்றைய பரிதாபமான நிலையில் எமது மக்கள் வாழ்வதற்கு முழுப்பொறுப்பையும் நீரே ஏற்கவேண்டிய காலம் வந்துவிட்டது. விரும்பத்தகாததாயிருந்தாலும் கடந்த காலத்தை மறந்து இலங்கையின் அனைத்து மக்களினதும் சுபிட்சமான வாழ்விற்கு பொறுப்புடனும் அவதானத்துடனும் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஏனையோர் சிலரைப்போல விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக முன்னிலைப் படுத்துவது போல் நான் செய்ய மாட்டேன் ஏனெனில் உமது கொடூரமான செயல்களால் தமிழ் மக்களால் அவ்வாறு நீங்கள் கணிக்கப்படவில்லை. உலகிலேயே மிக கொடூரமானவர் என்ற பெயரை நீங்கள் சம்பாதித்துள்ளீகள். நாட்டு மக்களுக்கு தினமும் பயத்தையும் பீதியையும ஏற்படுத்துவதன் மூலம் உங்களுடைய மதிப்பை மிக வேகமாக இழந்துவருகின்றீர்கள். உங்களுடைய பயங்கர ஆட்சியால் என்னைப்போன்ற ஒரு சிலர் தவிர சகல தமிழர்களின் குரலையும் அமைதிப்படுத்தி விட்டீர்கள். எனது காலத்திலேயே எமது இனப்பிரச்சினைக்கு தீர்வை காணத் தவறுவீகளேயாயிருந்தால் என்றும் தீர்வை காணமுடியாது. தயவு செய்து பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டி அடிப்படையிலான தீர்வை ஏற்பீர்களேயானால் பெரும் வரவேற்று கிடைப்பது மட்டுமல்ல ஆச்சரி யப்படக் கூடிய விதத்தில் எதிர்பாராத ஆதரவு கிடைக்கும்.

கடந்தகாலத்தில் நிகழ்ந்த சில கசப்பான சம்பவங்களை உமது ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். உம்மை அவமானப்படுத்தவோ அல்லது சங்கடப்படுத்தவோ அன்றி தமிழர்களை இரண்டாம் தரப்பிரஜைகளாக கருதும் சிலரது கண்களை திறப்பதற்கே. பெரும்பகுதியான சிங்கள மக்கள் நியாயமான முறையில் செயற்படும் பெரும்பகுதியான சிங்கள மக்கள் தமிழ் மக்களுடன் சமமாக வாழ்வதையே விரும்புகின்றார்கள். நாளுக்கு நாள் மக்கள் மாறிக்கொண்டு வருகின்றார்கள் சிலர் அபூர்வமான சிந்தனைகளையும் புதிய புதிய கண்டுபிடிப்புக்களையும் வெளியிடுகின்றார்கள். சரித்திரம் திரிக்கப்படுகின்றது.

சிலா் தமிழர்கள் போத்துக்கீசரால் யாழ்ப்பாணத்தில் புகையிலை நடுகைக்காக கொண்டுவரப்பட்டதாக கண்டுபிடித்துள்ளர்கள் மேலும் சிலர் இந்நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானதெனவும் அவர்களே இந்தநாட்டில் வாழ முடியும் என்றும் கூறுகின்றார்கள். இக்கூற்றுக்கு மிகக் கீழ்த்தரமான ஒரு விவாத்தை நடத்த நான் விரும்பவில்லை. 600 இலட்சம் தமிழ் மக்கள் வாழும் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்தை 20 மைல் பாக்குத் தொடுவாயே பிரிக்கின்றது என்பதை ஒருவர் அறிந்திருந்தால் போதும்.

யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் நாட்டுக்கும் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்தையும் பிரிக்கின்ற கடலை பலா் நீந்திக் கடந்துள்ளனா். இரவு போசனத்தை முடித்துக்கொண்டு இந்தியா சென்று ஒரு எம்.ஜி.ஆர் படத்தை பார்த்துவிட்டு அதிகாலை நாடு திரும்பிவிடும் சகோதரர்களைப்பற்றி எனது பள்ளித்தோழர்கள் கூறியிருக்கின்றார்கள். மேலும், 5 ஈஸ்வரன் கோயில்கள் பொலநறுவையில் உள்ள விஸ்ணு தேவாலயம், கதிர்காமத்து முருகன் போன்றவை சரித்திர காலத்திற்கு முந்தியே மிகப்பழமை வாய்ந்த கோவில்களாகும். ஒரு இனத்தையோ ஒரு குழுவையோ சேர்ந்தவனைப் போல அல்லாமல் எப்பொழுதும் நான் எமது பிரச்சினைகளை தேசப்பற்று கொண்டு ஒரு இலங்கையனாகவே நோக்குகின்றேன். இதுவே தேசாபிமானம். அமைதியும் பொறுமையுமே எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மிகவும் தேவைப்படுகின்றமையினால் நியாயமாக செயற்படும் சிங்களவர்களை தூண்டிவிட்டே அவமானத்தை ஏற்படுத்தியோ பிரச்சினையை மேலும் சிக்கலடையச் செய்ய விரும்பவில்லை.

உங்களிடம் சம்பளத்திற்கு வேலை செய்கின்ற அல்லது சில சலுகைகளை பெற்று வேலை செய்கின்ற உங்கள் முகவர்கள் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் ஐரோப்பிய யூனியன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு தடவை கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு விஜயம் செய்து மக்கள் அங்கு எவ்வாறு நடத்தப்படுகின்றார்கள் என்பதை அறிய அவர்கள் ஏன் யோசிக்கவில்லை? தம் பிள்ளைகளை விடுதலைப்புலிகள் சிறுவா் படையில் சோ்ப்பதை வன்மையாக எதிர்த்த பெற்றோர்கள் பலமாகத் தாக்கப்பட்ட கொல்லப்பட்ட சம்பவங்கள் பல நடந்துள்ளன. பலாத்காரமாக ஆள் சோ்ப்பதை ஆட்சேபித்து சிலா் தற்கொலை கூட செய்துள்ளனா். பகல் நேரத்தில் ஒளித்திருந்து விட்டு இரவு வேளை வீட்டுக்கு வருகின்ற பிள்ளைகளை காத்திருந்து பலாத்காரமாக கொண்டு செல்கின்றனா்.

சர்வதேச சமூகத்திற்கு உமது கட்டுப்பாட்டு பகுதிக்கு விஜயம் செய்ய அனுமதி இல்லாமையால் உமது நிர்வாகத்தில் திருப்தியடையாத மக்கள் தப்பிச் செல்லக் கூடியதாக ஏன் உங்கள் மீது அழுத்தம் கொண்டுவர முடியாது? சர்வதேச சமூகத்தை தவறான வழிக்கு இட்டுச்செல்லாமல் ஐரோப்பா நோர்டிக் நாடுகள் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் செயற்படும் உங்கள் முகவர்களை உங்கள் தலைமையகத்திற்கு திரும்பும்படி அறிவியுங்கள். உமது கட்டுப்பாட்டின் கீழ் வாழுகின்ற மக்கள் சுதந்திரமடைய விரும்புகின்றார்கள் தங்கள் பிள்ளைகள் வெளியுலகத்தை காண ஆசைப்படுகின்றாா்கள். அவர்களுடைய பிள்ளைகள் புகையிரதத்தை கண்டதோ, பிரயாணம் செயததோ இல்லை.

தொடர்ச்சி 04ம் பக்கம


எமது கட்சிக்காகவும் தமிழ் இனத்தின் விடிவிற்காகவும் உயிர்நீத்த எமது கட்சி தொண்டர்கள், தலைவர்கள் பற்றிய விபரங்கள், முக்கிய கட்டுரைகள் என்பனவற்றை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்தால் அவற்றை பொருத்தமான நேரத்தில் எமது உதயசூரியன் பத்திரிகையில் பிரசுரிப்போம் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு

உதயசூரியன் பணிமனை
30/1பீ அல்விஸ் பீளேஸ்
கொழும்பு –03

**வருடச்சந்தா 150.00 ரூபா**

உதய சூரியன் பத்திரிகையை பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்

இல: 38 சி, மக்கன்சி வீதி,
கெப்பீற்றிப்பொல மாவத்தை,
கொழும்பு - 5.


இப்பத்திரிகை சுலலித்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு 30/1B, அல்விஸ் பிளேஸ் கொழும்பு 03 இல் உள்ள த.வி.கூட்டணியினரால் வெளியிடப்பட்டுள்ளது.